உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சோமசுந்தரேசர் துணை.

# கல்லல் நகர்ச் சோமசுந்தரேசுவரர் சதகம்.

இது

கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ வீரசேகரஞானதேசிகர்

மாணவர் குழுவினு ளொருவராகிய

சிதம்பரசுவாமிகளென்று பெயர் வழங்கும்

ஸ்ரீமத் சுத்தப்பிரமானந்த சுவாமிகளால்

இயற்றப்பெற்று

கல்லல் சாதுக்கள் மடாலயத்தில் அரங்கேற்றப்பெற்று

கல்லல் பெரி. சுப. வலசையைச்சேர்ந்த

திருவாளர்

நாச்சியப்பசெட்டியாரவர்கள் பொருளுதவியால்


கண்டனூர்

ஸ்ரீ ஷண்முக விலாஸம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

ஆங்கீரச ஆண்டு வைகாசித்திங்கள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சோமசுந்தரேசர் துணை.

# கல்லல் நகர்ச் சோமசுந்தரேசுவரர்

# சதகம்.

இது

கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ வீரசேகரஞானதேசிகர்

மாணவர் குழுவினு ளொருவராகிய

சிதம்பரசுவாமிகளென்று பெயர் வழங்கும்

ஸ்ரீமத் சுத்தப்பிரமானந்த சுவாமிகளால்

இயற்றப்பெற்று

கல்லல் சாதுக்கள் மடாலயத்தில் அரங்கேற்றப்பெற்று

கல்லல் பெரி. சுப. வகையைச்சேர்ந்த

திருவாளர் நாச்சியப்பசெட்டியாரவர்கள் பொருளுதவியால்


கண்டனூர்

ஷண்முகவிலாஸம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1932

ஆங்கீரச ஆண்டு வைகாசித்திங்கள்.



சிவமயம்.

# சாற்றுக் கவிகள்.

உயர்திரு, கல்லல் குக. மணிவாசக சரணாலய சுவாமியவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

நாமகளும் பூமகளு நண்புகொளுங் கல்வியிறை
தாமகிழு நற்சதகத் தாமமதைப்—பூமகிழக்
கொண்டு புனைந்தான் குழகன் சிதம்பரவேள்
கண்டுபா வென்னக் கனிந்து.

உயர்திரு. பண்டித. சித. சங்கத்து நாராயணசாமியவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

கள்ளுலவுஞ் சோலைசெறி கல்லனக ரீசருக்குத்
தெள்ளுபுலம் பெற்ற சிதம்பரமால்—ஒள்ளியசீர்ப்
பாநூறு கொண்டரிய பாவலர் கொண்டாடவணிந்
தானூறு விண்டான் றரை.

கோவிலூர் அண்ணாமலைஞானதேசிகரவர்கள் மாணவருளோருவராகிய உயர்திரு. சண்முக சுவாமியவர்களியற்றியது.

நேரிசை வெண்பா.

வண்டினஞ் சூழ் தண்டலை சூழ் மாதவஞ்சேர் கல்விநகர்
எண்டிணிந்த தோளார்க் கெழிற்சதகத்—தண்டாமங்
கண்டு புனைந்தான் கவினார் சிதம்பரனும்
மண்டு புகழ்முனி வன்.

வித்துவான் கண்டனூர் திருவாளர் தே. அரு. சித. கரு. இராமநாதன்
செட்டியாரவர்களியற்றியது.

நேரிசை வெண்பா.

சீராருங் கல்லற் றிகழ்சோம சுந்தரற்கு
ஏரார் சதக மியற்றினான்—பாரோர்
நிதம்பரவிப் போற்றியுய்ய நித்தனடி நாடுஞ்
சிதம்பரநற் சீலன் றெளிந்து.

இவை, நாட்டரசன் கோட்டை, சிவன்கோயிலின்கண்
தேவார கைங்கிரியஞ் செய்விக்கும் நா. கரு.
ஐயாக் கருப்பன் செட்டியாரவர்கள் குமாரர்
திருவாளர் வித்துவான் நாராயணன்
செட்டியாரவர்களியற்றியவை.

நேரிசை வெண்பா.

என்னகருஞ் சொல்லற் கிணையில்சீ ரார்ந்தகல்விக்
தொன்னகர்வா ழுஞ்சோம சுந்தரர்க்கு—மன்னுதமிழ்ப்
பாமாலை செய்தான் பரமனனு பூதிபெற்றோன்
ருமார்க்கு மொப்பிலா தான். 1.

சுத்தப்பிர் மானந்த சூரியனுந் தூய்மைமிக்க
சித்தனு மெய்பொருளுந் தேர்ந்தவனு—முத்தமனுங்
கல்வி யறிஞர் களிக்குங் கவிஞனன்பு
மல்குஞ் சிதம்பரனு மன். 2.

க் கரும்பை யமுதத்தைச் செந்தேனைப்
பாலைத்தித் திக்குமெனப் பண்ணுவரோ—ஞாலமதில்
சோமசுந்த ரர்க்கினிய சொற்களாற் செய்தமைத்த
பாமாலை யைக்கேட் பவர் 3

கண்டனூர் பாரதமித்திரன் மானேஜர்
திருவெண்காடு கு. சீ. சோமசுந்தரதேசிகர்அவர்கள் இ பற்றியது.

கட்டளைக் கலித்துறை.

காரார் பொழில்திகழ் கல்லற் பதியமர் கண்ணுதல்மேல்
சீரார் சதகத்தைச் செப்பினன் யாரெனிற் சீருடனே
கூரார் அயிலுடைக் கோமளச் சண்முகன் குன்றையில்வாழ்
பேரார் சிதம்பர மென்னும் பெரியோன் பெரிதுவந்தே.

கோனார்பட்டு, கற்பக விநாயக கலாசாலைத் தலைமை
யாசிரியரவர்களாகிய
பிரமஸ்ரீ பண்டித **S**. ஆழ்வாரையங்காரவர்களியற்றியது.

நேரிசை வெண்பா.

*மல்லன் மிகுகல்லல் வான்சுந்த ரேசுரர்க்குச்*
*சொல்வளமார் பாமாலை சொல்லினால்—நல்லோர்க்*
*கினியன் சிதம்பரப் பேரேயுந் தூற்றேவான்*
*கனிபா லெனவே கனிந்து.*

பலவான்குடி திருவாசக மடம் உயர்திரு. பொன்னம்பல சிவம்
அவர்கள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

*மல்லற் பதிகல்லல் வாழ்சுந்த ரேசுரர் மாணடிக்குச்*
*சொல்விற் பனந்திகழ் பாமாலை சூட்டிச் சுகிர்தமுற்றான்.*
*நல்விற் பனர்களாற் சுத்தப்ர மானந்த நாமமுற்ற*
*கல்லற் சிதம்பர சாமி யெனப் பெறுங் கண்ணியனே.*

குன்றக்குடி மேலமடம் ஸ்ரீலஸ்ரீ கண. நித்யானந்த சுவாமியவர்கள்
இயற்றியது.

கட்டளைக் கலித்துறை

*நறுந்தேனவிர் பொழில்சூழ்கல்ல லாநன்னகர்க் கிறைவன்*
*பெறும்பே றினைத்தரும் பிஞ்ஞகனும் பிள்ளைச் சோமர்பணி*
*யுறுஞ்சோம சுந்தர னேர்சத கந்தனை யோதியவன்*
*றுறந்தோர் துதிக்குஞ் சிதம்பர நாமத் துறவறனே.*

பலவான்குடி திருவாசக மடம் உயர்திரு சு. அ. இராமசுவாமி
யவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

*நிதம்பரமன் றாளை நினைத்துப் பணியுஞ்*
*சிதம்பரனோர் மாலை செறித்தான்—பதம்பரசக்*
*கல்ல னகர்மேய கண்ணுதலார் பொற்புயத்தி*
*லல்ல லறுப்பீ ரறிந்து.*

புரிசை, திருவாளர் சு. முருகேசமுதலியார் அவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

*ஏர்கொண்ட குன்றக்குடிவாசிசாது யியற் றமிழான்*
*சீர்கொண்ட மெய்ம்மைச் சிதம்பரனார்துதி செய்சதகம்*
*பேர்கொண்ட கல்லவிடங்கொண்டு தார்கொண்டு பேசுபுகழ்*
*கார்கொண்ட கண்டத்த னின்னருட்காம் வழிகண்கொண்டதே.*

சென்னை சூளை, திருவொற்றியூரன் ஸமஸ்க்ருத கலாசாலை, உயர்திரு.
சுவாமி மௌ. சே. முக்தானந்தா அவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா.


*மீனாட்சி யோர்பாகம் மேவிப் பிரிய முடன்*
*தானாட்சி செய்யத் தழைத்துத்தான் — வானாட்சி*
*செய்கின்ற சோமர்மேல் சீர்ச்சதகம் தானுவந்து*
*செய்தார் சிதம்பரனார் தேர்.*

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர்
M. சிவஞானம் அவர்கள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

*சீர்திகழ் கல்லற் சிவபெரு மான்மேல் சிறப்புறமா*
*நேர்திகழ் நற்சத கந்தனைச் செய்தான் இனிமையுற*
*வார்திகழ் வள்ளி மணவாளன் குன்றை வதிந்தவன் போல்*
*நார்திகழ் உள்ளச் சிதம்பர சாமி நனியுவந்தே.*

சிவமயம்.



## பகச்சாலை விநாயகர் துதி.

செப்பருமொண் செல்வதிறை தேசாருங் கல்விநகர்ச்
சொப்பிரகா சச்சோம சுந்தரன்ற—னொப்பரிய
பொற்பகலா நற்சதகம் பூர்த்தியுறத் தண்ணருளை
நற்பகச்சா லைத்தந்தி நல்கு.

## கடவுள் பொதுவணக்கம்.

வேலவனு மாலவனும் வேதநவில் சுந்தரியுங்
காலவயிற் குன்னமா காளியொடு—நீலநிற
நற்கனியுங் கல்விநகர் நாதன் சதகமது
நிற்க வருள் செய்வார் நிதம்.

## நூல்

சீர்திகழ் தேவர் போற்றுஞ் சிவபெரு மானே யுன்றன்
றூர்வளர் புயத்தின் மீது தமியனேன் சூடு மாலை
யேர்பெற மிலைச்சி யெற்கா மின்னருள் புரியல் வேண்டுங்
கார்திகழ் சோலை சூழுங் கல்லல்வாழ் சுந்த ரேசா. (1)

ஆறிலோர் பாதி யான வாண்டினி லறிவ மைந்து
ஈறிலுன் புகழை யெல்லா மெங்கணும் விரித்தே நின்ற
வீறிய புகழ்சேர் காழி வித்தகர்க் கருளி வேதங்
கூறிடுங் கல்லல் வாழுங் குழகனே போற்றி னேனே. (2)

ஆவிகா னகலு நாளி லண்ணலே விடையில் வந்து
பாவியேன் றனையு மாண்டு பரகதி யருளல் வேண்டு
மேவிய புகழ்சே ரப்பர் மேன்மையை யடையச் செய்து
காவியங் கண்ணி யோடுங் கல்லல்வாழ் சுந்த ரேசா. (3)

## கல்லல் சோமசுந்தரேசுவரர் சதகம்.

கங்கையார் சடையாய் கல்லற் கறைமிடற் றிறைவ போற்றி
திங்களைச் சிரத்திற் பூண்ட திருவுடைத் தேவா போற்றி
மங்கையை யிடத்திற் கொண்ட மாபெருங் கடவுள் போற்றி
சங்கர பகவற் பாதச் சம்புவே போற்றி போற்றி. (4)

மிக்கமா தவங்கள் செய்து மேதினி தோன்று வண்ணா
மொக்கநன் நிட்டை யோகத் துறுநிலை யருளு வாயோ
சிக்கன்மா நகருண் மேவுஞ் செகம்புக ழுகந்த லிங்கத்
தக்கமா தவனை யாண்ட சம்புவே சுந்த ரேசா. (5)

இத்தரை மீது ஞான வெழிலருள் புரிய வேண்டு
முத்தம ருணரும் வண்ண முயர்திருக் கோவி லூரின்
முத்தனாய் வந்த வெங்கண் முனிவனு முத்த மாமத்
தத்துவன் றன்னை யாண்ட தயாபரா சுந்த ரேசா. (6)

தூயனுந் துறவுச் சாமிச் சுத்தனை யாள வன்று
தாயினு மிரங்கி வந்த சற்குரு சுந்த ரேசா
காயமே கதியென் றெண்ணிக் காரிருள் வசமாய் நின்றேன்
வேயுறு தோளி பங்கா விடையில்வந் தாளு வாயே. (7)

அல்லெனுங் குழலார் மீது வாசைகொண் டுழலு மெற்கு
நல்லருள் பாலித் தாண்டு ஞானத்தை யருளல் வேண்டுந்
சொல்லரும் பெருமை வாய்ந்த சுககுரு ஞானி நிர்கு
வெல்லரும் பிறப்பை நீக்கி வீடருள் சுந்த ரேசா. (8)

கீரமாங் கடலின் மீது கிடந்திடு மாலுங் காணாச்
சீரு ளெனக்கு நல்கிச் சேயெனை யாளல் வேண்டும்
வீரரும் வெல்ல மாட்டா விறன்மிகு பொறியை வென்ற
வீரசே கரனை யாண்ட வித்தகச் சுந்த ரேசா. (9)

எல்லையில் புகழான் மிக்க வெழிலுறுந் தில்லை தன்னுள்
வல்லெனுந் தனத்தா ணல்ல வாமபா கத்தி னிற்க
சொல்லரு மகிழ்ச்சி பொங்கச் சுந்தரத் தாண்ட வஞ்செய்
கல்லலம் பதியு ளானே காத்தருள் சுந்த ரேசா (10)

நங்குன்றுக் குடியி னின்ற ஞானசண் முகனு நீயே
யங்கிங்கு மெங்குஞ் சென்று மலைந்துள மனத்த னேனை
னங்கிங்கு மெங்கு நின்றே யாறஞ்சோ டஞ்சைக் கண்டாய்
*சங்கக்க ணுடையாய் கல்லற் றணுவே யருள்செய் வாயே. (11)

சிசுவொடு விருத்த னாகித் திருவிளை யாடல் செய்தாய்
விசுவநா தனுமே யானாய் விசுவத்தை நம்பி னையோ
கொசுகதாப் பாத நீரிற் கூடுதல் போலு மானேன்
பசுபதி யருள்வா யெந்தாய் பரமனே கல்லற் றேவே. (12)

கச்சிகா மாட்சி யானாய் களங்கமின் மூர்த்தி யானா
யச்சமில் சோதி யாக வடியனுக் கருள்செய் வாயோ
பச்சைமா மலைபோன் மேனிப் பவளவாய்க் கமலச் செங்க
ணச்சுதன் வணங்குங் கல்ல லருவனே சுந்த ரேசா. (13)

கோவிற்பட் டியினில் வாழுங் குருமுத்தா னந்த ருக்குத்
தாவிலாச் சுகத்தை யீயத் தத்துவ முணர்த்தி வைத்தாய்
காவிசே ராடை பூண்டேன் கருணைமா மணியே கல்ல
லாவியே யம்மை யப்பா வடியனை மறத்த னன்றே. (14)

ஒப்பிலாக் கைவல் யத்தை யுலகினர்க் கருளா நின்ற
தப்பிலாத் தாண்ட வேசன் றனக்குநல் லருள்பா லித்துக்
கொப்புலா முமையா ளோடுங் கோதறு கல்லன் மேவு
மப்புலாஞ் சடையி னானே யண்ணலே பணிகின் றேனே. (15)

பெருமைசேர் பனையூர் தன்னிற் பெரியதெக் கணாமூர்த் திக்கும்
அருமைசே ரருள்பா லித்து வாண்டநின் சரணம் போற்றி
யெருமைசேர் கால னென்பா லெய்திடா தருள்பா லிப்பாய்
கருமைசேர் குழலா ளோடுங் கல்லலம் பதிவாழ் வோனே. (16)

சங்கர நார ணற்குச் சார்ந்திடும் பனையூர் தன்னிற்
பொங்கிய வருள்பா லித்த புனிதனே தூய கங்கை
தங்கிய வேணி யானே தமியேனற் கருள்வ தென்றோ
விங்கெனை யாத ரிப்பா யிணையிலாச் சுந்த ரேசா. (17)

---

* சங்கம்—நெற்றி.

நீலாய தாட்சி நாதா நித்தபரஞ் சுந்த ரேசா
மாலாய வுளத்தா னென்றும் மடமையிற் சிறந்தே னாகிச்
சாலாய தாபத் தாலே சந்ததம் வாடு கின்றேன்
காலாய வாபத் தென்னைக் கலக்காதிங் காளு வாயே. (18)

நாங்குடி யார்க்கு மல்லே நமனையு மஞ்சே மென்று
பாங்குடன் போற்றிப் பாரில் பதம்பெறு மப்பர் மானுர்
பூங்குடி மதுரைச் சாமிப் புனிதனுக் கருள்பா லித்த
தேங்குடி கொண்ட கல்லற் றேவனே யருள்செய் வாயே. 19

ஆலவாய் தன்னில் வந்த வரசப்பர்க் கருளு மாபோல்
சாலவுந் துயரால் வாடுந் தமியனேற் கருளல் வேண்டும்
வேலவன் றன்னை யீன்ற வித்தகா கல்லல் மேவு
மாலவன் றானு மான மங்கையோர் பங்கி னானே. (20)

பங்கயற் கரிய வொண்ணாப் பராபரை பாரின் மீது
மங்கைமீ னாக்ஷி யாகி மதுரைமா நகராண் டாளைப்
பங்கினி லுடையா யிந்தப் பாதகன் றனையும் பார்ப்பாய்
*கங்கையி லுடையாய் கல்லற் கற்பகக் கனியே போற்றி.(21)

பரதத்வ முணரா திந்தப் பாரினிற் பிறந்த மேலோர்
பரதத்தி லுவந்த வுன்றன் பதமலர் பணியா வெற்குச்
சரதத்தி லருளை நல்கி சற்கதி சேர்த்தி டாயோ
வரதத்தர்க் கருளிக் கல்ல லமர்ந்துள தேவ தேவே. (22)

செம்பொனே யூறு கின்ற செம்பனூர் சிவனு நாதா
செம்பரம் பொருளே சோதி சிவபுரத் தரசே கல்ல
லும்பர்சீ ராளு மன்னு வுமையவள் கோனுந் தேவே
செம்பொனே மணியே தேனே சிறியனுக் கருளு வாயே.(23)

இல்லறத் தாசை சற்று மிலாதென்று மிப்போ தாகிச்
சொல்லொடு பொருளும் விட்டுச் சுகானந்தசொரூ பத்தின்க
ணல்லொடு பகலுஞ் சேர வடியனுக் கருள்வ தென்றோ
கல்லலில் வாழு முக்கட் கடவுளாஞ் சுந்த ரேசா. (24)

*கம் + கையிலுடையாய் = கையில் பிரம கபாலத்தை யேந்தியவனே.

சீலத்தோ டிசையுஞ் சேர்ந்தோர் சீர்திகழ் வடிவு கொண்ட
ஞாலத்தார் புகழு மெங்கள் நாச்சியப் பனையுங் காப்பாய்
ஞாலத்தை வெறுத்து நின்ற ஞானியைக் காண வேண்டித்
தாலத்திற் றங்க லானேன் றந்தருள் சுந்த ரேசா. (25)

பயின்மிசைத் திரிந்து நாளு மன்னுயிர் தனைப்பு ரக்கு
மயிலவன் றன்னைக் கொண்டே வருங்குணக் குருப ரர்க்கு
முயர்வுறு ஞான மெல்லா முதவிய வொருவ போற்றி
கயலுலாங் கழனி சூழுங் கல்லல்வாழ் சுந்த ரேசா. (26)

உத்தம வசிட்ட ருக்கு முணர்வையே யளித்தா யன்று
பித்துறு முலகை வாழ்விற் பேதுறு நெஞ்சி னேனை
முத்தியில் வைப்ப தென்றோ முதல்வனாய்க் கல்லன் மேவி
யத்திமா முகனைப் பெற்ற வண்ணலே சுந்த ரேசா. (27)

*சிவமலை தன்னில் வந்த சித்தமை நித்யா னந்தன்
சகமெலா மாகச் செய்தாய் சந்தத வெனையெப் போது
மகமகிழ்ந் தாளக் கொள்வா யகத்தறு பகையி னாலே
சுகமது மறக்க லானேன் அயப்பிர காச வாழ்வே. (28)

வெண்ணெய்மெய் கண்டான் றன்னை வீறமை கதியில் வைத்தா
யண்ணலே புவியின் மீதே யலகைபோற் றிரியா நின்றேன்
மண்ணினிற் பிறவாப் பேற்றை மாதவா வருளல் வேண்டும்
விண்ணவர் வியக்குங் கல்லல் விமலனே சுந்த ரேசா. (29)

கொற்றவன் குடியில் வந்த கோகிலா வுமாப திக்கு
முற்றவு மருளா லித்த முதல்வனே யெனையெஞ் ஞான்றுங்
குற்றமில் கதியில் வைத்தல் கோவேயுன் பார மாகு
மற்றவர் வியப்புங் கல்லல் ஞானநா யகனே யீசா. (30)

†ஆடகப் பணியார் மீதி லாசையுற் றவர்கள் பாலே
ஓடக மொழியச் செய்வா யொருவனே யுருவி லானே
சேடமா மதிங்கள் சூழுந் தொல்புகழ்க் கல்லன் மேவுந்
தேடருங் கருணை யெங்க ளிறையனே சுந்த ரேசா. (31)

அருள்வடி வாக நின்ற வகத்தியர்க் கருளு மாபோல்
மருள்வடி வானெ னக்கு மாசிலாக் கதியை யீவாய்
தெருள்வடி வாக வென்று திகழ்ந்திடுங் கல்லன் மேவு
பொருள்வடி வமர்ந்து ‡செல்லை யிலங்குநற் கண்கொண் டானே.

---

* குன்றக்குடி. † பொன். ‡ சூரியனை.

வெற்றிசேர் மதுரை தன்னில் விளங்கிநல் லருள்பா லித்த
பெற்றிசேர் பிரமா னந்தர் பெருங்கதி சேரச் செய்தாய்
முற்றவு மெனக்கு நல்ல முத்தியைத் தருவ தென்றே
கற்றவர் விரும்புங் கல்லற் கடவுளே யருள்செய் வாயே. (33)

அந்தமு மாதி யில்லா வண்ணலே யென்ற னுக்குத்
தந்தையுந் தாயு நீயே தரணியி லெல்லா நீயே
விந்தைசேர் வேதவ் யாசன் றனக்கருள் வீட்டை யின்று
கந்தமார் சோலைக் கல்லற் கடவுளே யெனக்கீ வாயே. (34)

ஆசையாங் காற்றி னாலே யலைகின்றேன் றுரும்பே போல
மோசநா னடையா முன்னர் மோட்சத்தை யருளல் வேண்டு
மாசையற் றுலகி னின்ற வருஞ்சுகப் பிரமந் தன்னைத்
தேசலாங் கதியில் வைத்த தேவனே கல்ல லீசா. (35)

பொன்முதற் பொருளை நாளும் புகலென நம்பும் பொல்லாக்
கன்மனந் திருத்தி யென்னைக் கதிபெற வாளு வாயே
தென்மலர்ச் சோலை யாரூர்த் தெக்கண மூர்த்திக் கன்று
வன்மல மிரித்துப் போதம் வழங்கிய சுந்த ரேசா. (36)

ஏர்நிறை யும்ப ரெல்லா மெழிலமை விண்ணி னின்று
சீர்நிறை சுந்த ரேச செயசெய வென்று போற்றத்
தேர்தனில் வீதி மேவுந் தேவனே யென்னை யாண்டு
பேர்பெற வைப்பாய் கல்லற் பெருநக ரமர்ந்த கோவே. (37)

கொள்ளையாய்ப் புலன்க ளெல்லாங் கொடுமையைப் புரித லாலே
பிள்ளையா மெனக்குத் தீய பேதுற றருளல் வேண்டும்
வெள்ளையப் பையா வுக்கு வேதவீட் டினைய ளித்தாய்
கள்ளிழிந் தொழுகுஞ் சோலைக் கல்லல்வாழ் சுந்த ரேசா. (38)

சந்தத முலக வாழ்விற் சஞ்சரித் திடுகின் றேனைப்
பந்தம தொழித்துத் தூய பரகதி யருளுவாயே
யந்தமார் பொழில்கள் சூழ்ந்த வரிமளா நகரில் வாழுஞ்
சுந்தரக் குருவை யாண்ட சுந்தரா னந்த வாழ்வே. (39)

இதம்பெற வுன்னை யானு மினிது பூசித்து மில்லேன்
பதம்பெற விருப்பங் கொண்டேன் பாரிது தருண மையா

சிதம்பரத் தலத்தி லார்ந்த செயநித்யா னந்த ருக்குச்
சதம்பெற வருளுநங் கல்லற் சங்கர சுந்த ரேசா. (40)

தப்பறப் பன்னூ லாய்ந்து தவநெறி யொழுகா நாயே
னிப்பெரும் பிறப்பு நீங்க வின்னருள் புரிய வேண்டுஞ்
செப்பரும் பெருமை வாய்ந்த சீர்திகழ் தஞ்சை யின்கண்
குப்புரா மையயு மாண்ட குருபர சுந்த ரேசா. (41)

சீருற்ற பத்தர்க் கெல்லாஞ் சித்திகள் சிவணச் செய்தா
யோருற்ற யாங்கி யத்தி லெங்குல தெய்வ மானாய்
பாருற்ற கம்ப னைப்போற் பாடுதற் காசை கொண்டேன்
நேருற்ற சுந்த ரேசா தெளிவெனக் கருளு வாயே. (42)

சாந்தலிங் கப்பேர் கொண்ட சற்குண னொருவ னுக்கு
மாந்தர்கள் காணு ஞான மறுவற வருளு மாபோல்
சாந்தம தறியா விந்தச் சழக்கனேற் கருள்வா யென்றும்
*பாந்தளை யணியுங் கல்லற் பரமசிற் சுந்த ரேசா. (43)

பட்டமங் கையினிற் செல்வர் பலவுறக் குருவாய் வந்த
விட்டனே போற்றி யுன்ற னிருதிரு வடியும் போற்றி
கட்டங்க ளறுகா தாளக் கருதினே னுன்னை யென்றுந்
சிட்டனேற் கருள்வாய் கல்லற் சிவபெரு மானே போற்றி. (44)

காலனை மார்க்கண் டர்க்காக் காய்ந்திடுங் கடவு ளேயன்
றாலமு மமுதாக் கொண்டுங் காமனை யாளாச் செய்து
மாலயா மனைமயங் கின்ற முதல்வனின் மூர்க்க னேற்குச்
சீலமு மாக்கை யீவாய் சிவனேசிற் சுந்தரேசா. (45)

தம்மவருங் கேளிர் சூழத் துறவறந் தனைம றந்து
பவ்வெனுங் காம மிக்குப் பார்தனிற் பங்கம் வைத்தோ
ருன்னரு நரம்பர் வந்தா லுயிருற நகையென் கொல்லோ
முன்னவா தாளி போற்றச் சுழைமுஞ் சுந்த ரேசா. (46)

சகலிலே யரியா மெய்க்குச் சற்குரு வாகிச் சத்தாந்
தகவிலே யருமா வுன்றன் தாளை வணங்கு கின்றேன்
றகுதியே யருமாஞ் சித்துந் தண்ணருள் பாலித் தென்று
மகிலே கல்ல லாக வமர்ந்தருள் சுந்த ரேசா. (47)

*பாம்பு.

ஆத்திக ராலு ரன்றி யறிவிலாக் கசடரான
நாத்திகர் காண மாட்டா நாதனை நம்பி வந்தே
னேத்திய வித்யா ரண்யர்க் கிதம்பெற வருளுங் கோவாஞ்
சேத்திர மான கல்லல் சிறந்தமர் செல்வத் தேவே. (48)

தவப்பிர காச மற்றித் தரணியிற் றிரிகின் றேனை
யுவப்புட னுள்வாய் சென்னை யொளிர்கர பாத்ர னென்னுஞ்
சிவப்பிர காசன் றன்னைச் சீர்நிறை கதியில் வைத்து
நிவப்பமை கல்லல் வாழு நிர்மலா னந்த வாழ்வே. (49)

பாகமை நெஞ்சி னேனுன் பதமலர் பணியே னேனுங்
கிளரருட் சோதி யேயுன் கிருபையை யருளல் வேண்டும்
வளமமை நால்வர்க் கன்று வடவாலிற் றென்பா லாகி
யுளமமை வுறுமா றுண்ட வொருவனே சுந்த ரேசா. (50)

உவப்புட னுன்றாள் போற்று வுளுத்தனே னொழுக்க மில்லே
னிவப்பமை நிலையி னிற்க நின்னடி பணிந்து நின்றேன்
றவப்பிர காசஞ் சார்ந்த தருந்துறை மங்க லத்துச்
சிவப்பிர காசர் போற்றத் திகழுநற் கல்வித் தேவே. (51)

அறுபத்து மூவர்க் காக வனந்தநல் வடிவங் கொண்டா
யுறுபெரும பொருளே நாளு முயர்ந்தவர் காணுஞ் சோதி
தெறுமல மகனுல் வாடுஞ் சிறியனேன் றன்னை யாண்டு
பெறுபதந் தருவாய் செல்வம் பெருகுசீர் கல்வித் தேவே. (52)

ஊனத்தை நீக்கி யிந்த வுலகிற் றிடவே பெற்று
ஞானத்தை நல்கி யென்று நசித்திடாக் கதியில் வைப்பாய்
வானத்திற் றிரியுஞ் சந்த்ரன் வழிபடக் கல்லல் வந்து
தேனொத்த மொழியா ளோடுந் திகழ்ந்திடுஞ் சுந்த ரேசா (53)

ஆக்குத லளித்த லென்று மழித்திட லனைத்து முன்ற
னோக்கினு னிகழ்வ தல்லா லொக்கிடிற் பிறிதொன் றுண்டோ
வாக்கொடு மனதிற் கெட்டா வள்ளலே மாவி லோடு
வாக்குவோன் றனுந தேடு மழகனே கல்ல லீசா (54)

பயனிலா நெறியி லிந்தப் பாவியேன் புகினு முன்ற
னயறலா மருளி னாலே நன்றுநீ யுய்யச் செய்வா

யயன்வடி வாகி யந்நா ளமரர்கட் கருளி யென்றுங்
கயலுலாம் விழியா ளோடு கல்லல்வாழ் சுந்த ரேசா. (55)

அந்தரத் திமையோர்க் கென்று மருள்புரி காட்சி போல
வந்தருள் செய்வா யிந்த வறிஞனேன் றனக்கு மின்று
சந்த்ரபுஷ்க ரணித் தீர்த்தஞ் சார்ந்திடுங் கல்ல றன்னில்
சுந்தரி யுமையாள் பாகச் சுந்தரக் கடவுள் போற்றி (56)

கண்ணிணைப் பறித்தே யுன்றன் கண்டனி விருத்தி யேத்துந்
திண்ணனு மன்பி னோடு திருந்திய வீடே யெய்த
மண்ணினிற் சிறந்த சீகா ளத்தியின் மகிழ்வோ யென்ற
னெண்ணரும் பிறவி மாய்ப்பா யெழின்மிகு சுந்த ரேசா. (57)

மாறுகொண் மனத்தி னாலே மகிதலந் தன்னி லுன்றன்
வீறிய புகழை யென்றும் விளம்பிடாத் தீயேன் றன்னை
யாறணி சடையாய் நல்ல அருங்கதி சேரச் செய்வா
யாறமை தலமாங் கல்ல லமர்ந்துள சுந்த ரேசா. (58)

மைதனைத் துணித்த போதுங் கண்ணுறுச் சதாசி வேந்த்ரப்
மையுதவிற் பிரமத் திற்குப் பாங்குற வருளு மாபோ
னையமின் றிருந்த வெற்கு நல்லரு ளல்கி யாள்வாய்
மைதவ மிலாநா ள் வாழுங் கல்லல்வாழ் சுந்தரேசா. (59)

அரும்புக முலைக் காவு ளிலாண்ட வல்லி யோடும்
விரும்பியே யுறைய நிற்கும் விமலவுன் பாதம் போற்றி
சுரும்பமர் கொங்கல் நீடுஞ் சுந்தரக் கடவுள் போற்றி
வரம்பிலா வீச போற்றி வள்ளலே யரசே போற்றி. (60)

பொற்பணி பூணு மாதர் போகத்தைப் பொருளா வெண்ணி
நிற்பனி யாது நாளு நிலமிசை வாழ்வோ ரெல்லாம்
பொற்பமை மோட்ச வீட்டைப் பொருந்துவ துண்டோ போற்று
நற்றவர் வாழுங் கல்ல னகர்தனி லுறைவா யே. (61)

பெருமையை யுடைய சோதி பிக்கதற் றெளிவே தேனே
யிமையவர் விருமிக் கென்று மிறைபிலாப் பதவி யீய
வருணையி லமுர்த்தக் கொண்ட வாலமின் மனத்த னேற்குங்
கருணையை யருள்வ தென்றோ கல்லலி லுவந்த தேவே. (62)

குகை நமச் சிவாய னென்னுங் கோதிலா னருணை தன்னில்
பகையிலா வண்ண நின்ற பராபர மாகச் செய்தாய்
தகைமையார் நெறியி னிற்கத் தாண்மலர் பணிந்து நின்றே
னகைமதி மிலைந்த கல்ல னனியுறை சுந்த ரேசா. (63)

சிதம்பரப் பேர்கொண் டிந்தச் சீர்நிறை கல்லல் வந்தேற்
கிதம்பெற வருள்பா லித்த லியைந்தநின் பாத மாது
நிதம்பெரி யோர்கள் கண்ட நின்னையல் லாது முண்டோ
மதங்கெடுத் தாளு மைய மாசிலா மணியே போற்றி. (64)

கருணைசே ரரியி னோடு கஞ்சநான் முகனு முன்ன
ரருணையிற் றேடிக் காண வரியனாய் விளங்கா நின்றாய்
தருணமீ தென்னை யாளத் தஞ்சநீ யல்லா லில்லை.
சருணைசே ருமையி னோடுங் கல்லல்வாழ் சுந்த ரேசா. (65)

கமலாட்சி வாசஞ் செய்யுங் கல்லலை யிருப்பு மானாய்
சமலமாம் வனிதை யார்பாற் சார்ந்திடு மதியை நீத்து
வமலமா முன்றன் பாத மடைவதற் காசை யுற்றேன்
விமலமா யிருக்குந் தேவே வேண்டினேன் வேண்டி னேனே. (66)

செந்தமி ழின்ப மாந்தச் செழியனைக் கூட லில்வந்
தந்தமில் பாண்டி நாட்டை யாண்டிடு மருமை கண்டே
யிந்தமா மாலை தன்னை யினிதுனக் கணிந்து நின்றேன்
கந்தவான் கொன்றை சூடுங் கல்லல்வாழ் சுந்த ரேசா. (67)

வேறு.

எந்த வகைசெய் திடிற்கருணை யெனக்கு நீயு மீவாயோ
வந்த வகையை யானறியா தவமே காலங் கழிக்கின்றேன்
பந்தங் கெடுத்துச் சுந்தரர்க்கும் பரம பதத்தைக் கொடுத்தோனே
நந்தன் முதலோர் தமையாண்ட ஞான வடிவாஞ் சுந்தரனே (68)

பெருந்த வங்கள் பலசெய்து பெற்றார் பலபேர் வீடதனை
யருந்த வங்கள் புரியாம லவமே காலங் கழிக்கின்றேன்
குருந்தின் கீழன் றெழுந்தருளிக் குருவாய் மணிவா சகர்க்கருளுந்
திருந்தார் புரமூன் றதையெரித்த தேவா கல்லற் றெள்ளமுதே (69)

வெண்டா மரையில் வீற்றிருக்கும் வேதன் காணு விபும்வநற்
றண்டா மரையின் மலரனைய தண்ணு மிரண்டு பாதத்தோய்

வண்டா ரலங்க றணிச்சூடும் வள்ளால் ஞானச் சுந்தரனே
கண்டார் மகிழும் சிபுமுனிபோற் கலங்கா ஞான மெனக்கருளே 70

வடவூ ரிராம லிங்கருந்த வழங்கும் பெரிய வருளுடையா
யிடமே பெருகி யேசற்றிங் கிருக்க லானேன் சுந்தரனே
யுடையாய் நீயே யருளுகியென் றுணர்த்தா தொழிந்தே கழிந்தலைந்தேன்
அடியா ரருளா லிருணீங்கச் சோதி யினிக்கான் முனிவரையே (71)

கல்ல லரசே ககனத்தோர் காணு மரசே கவினுரு
மல்ல லரசே மட்டிதழார் மத்த வரசே மாவேறு
நல்ல வரசே நாயேனை நாளும் புரக்கும் பேரரசே
யல்ல லறுப்பா யென்னரசே யடியார்க் கருளுஞ் சீரரசே (72)

பொன்று ஞானப் புங்கவனுய்ப் போரூர் தன்னில் வீற்றிருந்தே
நன்றாய் ஞானந் தனையன்று நலஞ்சே ராறு முகன்றன்னால்
குன்றாப் புகழ்சேர் சிதம்பரனார் கொள்ளச் செய்த பெருமானே
குன்றாப் புகழ்சேர் கல்லல்வருங் கர்த்தா ஞானந் தனையருளே (73)

ஈசா வன்றங் கருணைதனி லீசா னியக்கி லுறைவோர்க்குத்
தேசார் ஞானந் தனைக்கொடுத்துத் திகழும் புலியா யருகிருந்த
நேசா லிங்க நீசனுக்கு நிமல ஞானந் தனையருள்வாய்
பேசா ஞானப் பெரியர்தொழப் பிறங்குங் கல்லற்றனிப்பொருளே.

சசிவர் ணப்பேர் கொண்டிருந்தச் சகத்திற் பிறந்த வொருவனுக்குக்
கசிவாய் ஞானந் தனையருளுங் கருணை யெனக்கெங் குற்றதுவோ
வசிவந் தென்ற வூரங்கோயில் வயங்கு மிடமாய்த் தான்கொண்டு
சசிவார் சடையா யெனையுடையாய் சாமீ கல்லற் பரம்பொருளே 75

ஆலங் குடித்தங் கமரரையு மன்று காத்த தேபோல
வாலங் குடியிற் செனித்தெற்கு னடியார்க் கருளு மருளீவா
யாலங் குடித்து மழியாதிங் கனந்த முயிருக் குயிரானு
யாலங் காட்டி னடமாடு மண்ணு வருமைச் சுந்தரனே (76)

தேனார் தொங்க றணிச்சூடித் திகழுஞ் செல்வச் சுந்தரனே
ஞானு கரனே யெற்கருள்வாய் ஞாலம் புகழப் பெருஞான
மானு மதுரை தனில்வந்த மாசீர் நாயா யனார்க்கருளுங்
கானார் பொழில்சூழ் கல்லல்வளர் கருணைக்கடலே கண்மணியே 77

பொன்னை யடைந்தா ரெல்லாரும் பொன்னாற் பொருந்தும் பலனடைந்தா
ருன்னை யடைந்த யாங்களெலா முன்று னலன்க டமையடைந்தோம்
பொன்னை யடைந்தார் தம்மாலே பொன்னுக் கெதுவு மிலாததுபோ
லென்னைக் கொளுநற் சுந்தரநீ யெந்தப் பயனைப் பெறுவாயோ (78)

டோ ளிருப துடையானைத் திகழ்ந்த விலங்கை யிராவணனை
யெண்டோ ளிரண்டு கொண்டன்று யேகியழித்தாற் கருள்வாழ்வே
யுண்டோ வெனைப்போன் மதியிலியிவ் வுலகி லென்றே மால்கொண்டேன்
கண்டோர் மகிழக் கல்லல்வளர் கரும்பே பெரிய பரம்பொருளே 79

அன்றே யாரா வந்துரைக்க வருமை யறியா னெனத்தள்ளாய்
நன்றே யமைந்த ஞானிகள்பா னண்ணச் செய்து மருளளித்தாய்
குன்றே யனையாய் மெய்ப்பொருளைக் கூற வருளைக் கொள்வாயோ
யின்றே யருளா திருப்பாயே லெங்கே செல்வேன் சுந்தரனே. 80

கருணை மிதவே யல்லாமற் றமியேற் கருளப் பிறிதில்லை
கருணை செய்திங் கெனையாண்டு கதியைத் தரவே பணிகின்றே
னருணை கிரியார் தமக்கருளு மாறு முகனார் தனைப்பெற்ற
கருணைக் கடலே பெருமானே கல்லற் பதியாய் பெருந்தகவே. (81)

காமத் தானைக் கண்ணாலே கரியாச் செய்த பெரியானே
நேமத் தான்பட் டியில்வந்த நிமலன் பழநிச் சாமியெனு
நாமத் தானு மொருவனுக்கு ஞாலம் புகழப் பேரருள்செய்
தாமத் தானே கல்லல்வரு தண்ணு ரமர்ந்த புரந்தரனே. (82)

அழியாப் பொருளென் றுலகோர்க ளன்பி னோடு புகழ்ந்தேத்தும்
விழியாப் பரிதி மதிகொண்ட விமலா கல்லல் வீற்றருள்வாய்
கழியாப் புகழ்சேர் பழமலையில் கலைதேர் குமார தேவருக்கு
மொழியாப் பதவி கொடுத்தோனே யொருவா வொண்மை யுத்தமனே. 83

துன்னுஞ் சோம சுந்தரனைத் தூய மதுரை தனையாண்டு
மன்னுஞ் சங்கப் புலவருடன் மதுரத் தமிழை யினிதாய்ந்து
வுன்னுஞ் சங்கத் தமிழ்வளர்த்தே வொருவா விருவர்க் கரியானே
யென்னை யாள்வாய் கல்லல்வள மெழிலார் சோம சுந்தரனே. (84)

மின்னே ரிடையா டன்னோடு மேவு மொருவா நினையல்லால்
பின்னோர் தெய்வ மில்லென்னும் பேரா ஞானந் தனையுடைய

தன்னை யில்லாச் சாதுக்கடங்குங் கல்லன் மடாலயத்தி
லன்னோர் பலர்க்கு மருள்செய்த வமலா வெனைநீ காத்தருளே. (85)

முத்தா முத்தி தரவல்ல முதல்வா வெங்கண் முழுமுதலே
பித்தா வென்று புகழ்ந்தாலும் பெறும்பே றருளும் பெருமானே
குத்தா லத்தில் வீற்றிருக்குங் கோவே யென்னை யாண்டருள்வாய்
கர்த்தா வென்று பலரேத்தக் கல்லல் வாழுங் கற்பகமே. (86)

வள்ளன் மிருசீர்க் குடந்தைதனின் மவுன சாமிக் கருடந்தாய்
வெள்ள மான வெண்ணத்தால் வீணாய்த் திரிந்த வெறியனுக்கு
கள்ள முடையோர்க் கரியானை களங்க மில்லாச் சுந்தரனை
யுள்ளங் குடியாக் கொள்வோனை யுயர்ந்த வீட்டை யுகந்தருளே 87

ஆயும் பொழுதிவ் வுலகுதனி லடியேற் கியாருந் துணையன்று
தாயு மாகித் தந்தையுமாய்த் தண்ணா ரருளைப் புரிந்திடுவாய்
தாயு மான சாமிக்குத் தாவி லின்பந் தனையளித்தாய்
பாயும் புலித்தோ றரித்தென்றும் பயிலுங் கல்லற் பதியானே (88)

குட்டை யப்பேர் கொண்டிருந்தக் குவல யத்தோர் மகிழ்ந்தேத்த
மட்டின் மகிமை திகழ்ந்திடுநன் மதுரை நகரி லெழுந்தருளிச்
சுட்டற் கரிய திருப்பணியாய் கருங்கற் கோயி லமைத்தோனைச்
சிட்ட னாகக் கொண்டோய்கா சிவனே கல்லற் றனிமுதலே (89)

நீச னென்று மயல்கொண்டு நீர்மை யற்ற புரிந்திடுங்கான்
மாசுகொண்டு சுழன்றிடவே மதிக்கும் பெரிய வருளாளன்
றேசு மிருந்த பூங்குடியிற் றிகழு மிளகாய்ச் சாமிதனக்
காசி னெறியை யருள்வோனை யஞ்சே லென்பாய் சுந்தரனே (90)

தில்லைப்பொன்னம் பலத்தாக்குந் திடஞ்சேர் ஞானந்தெளிவித்தாய்
தால்லே தோன்றாச் சோம்பனுக்குச் சுத்த சொரூபந் தோன்ற வைத்தா
னல்ல தன்று மௌனநவில்வார் நாடு ஞாலந் தனிலுண்டோ
கல்லல் மேய கரும்பேயென் கைமா றறியாப் பெருமானே. (91)

இந்நாள் வரையும் யான்செய்த வெல்லாப் பிழையும் பொறுத்தெனக்கு
எந்நா ளனிலு மழியாத வீறில் பதத்தைக் கொடுத்திடுவா
யந்நாட் பதும பாதருட னத்தா மலகர் தனையாண்டு
*பொந்நார் கல்லற் பதிமேவும் போதந் தருமெம் பரம்பரனே. (92)

---

* எதுகை நோக்கி னகரம் நகரமாயிற்று.

இளையான் குடிவாழ் மாறனையு மின்ப மடையச் செய்ததுபோ
னிளைசைப் பதிப்பேர் தனைக்கொண்ட வெங்கள் குலத்தைக் காக்கவந்தா
யுலையா நெஞ்சம் பெறுவதற்கிங் குன்னை விட்டிங் கெவர்க்குரைப்பேன்
றளையாம் பிறவி யென்றுமிலாத் தன்னை ரில்லாச் சுந்தரனே (93)

கேட்டை விளைக்கு மைம்புலனைக் கெடுத்திங் கென்றுங் கேடில்லா
வீட்டைப் பெறுதற் குன்கழற்கு வேறாய் வீடெங் கனுமில்லை.
கோட்டை யூரிற் கோவான குருவாம் யோகா னந்தர்க்கு
நாட்டிற் சிறந்த வருணண்ணா நாடும் ஞான சுந்தரனே. (94)

அஞ்சாச் சூரன் றனைவெல்ல வைந்து முகத்தோ டாறுமுப்
பஞ்ச கோச வசமாகிப் பதாராய் நிற்ற லறியாயோ
பஞ்ச கோசத் துள்ளொளியாய் பற்றற் றிருந்த பரமாறுய்
பஞ்ச மூர்த்தி யாய்வந்து பார்க்கும் பரம சுந்தரனே. (95)

அரிய பெருமா னடியாரை யாளும் பெருமான் சிவபெருமான்
பெரிய பெருமான் முதர்பெருமான் பிறங்குங் கங்கைச் சடைப்பெருமான்
கரிய கால னெனையணுகக் காட்டாப் பெருமான் கடையேனை
யுரிய பதவி தனில்வைத்த வொருவன் கல்லற் பெருமானே. (96)

நல்லார்க் கருளு மருணைதனில் ஞானந் தன்னை நற்றவனுர்
வல்லா ளப்பே ரொருவனுக்கு வழங்கும் ஞான வாரிதியே
பொல்லார் காணுப் புண்ணியனே புகழார் கல்லற் புத்தமுதே
பொல்லா மணியே பொறுப்பில்லாப் புலையேன் குற்றம் பொறுத்தருளே .97

வடியாக் கருணை வாரிதியே வள்ளா லுன்னை யுள்ளாது
செடியான் மிகவும் பிடிபட்டேன் சேவே றீசா வெனையாள்வாய்
கடியார் பாதத் தாண்மலரைக் கண்ட னூரா மதனினின்ற
வடியார் சின்னத் துறவுக்கு வருளுங் கல்லற் பரம்பொருளே .(98)

எறும்பூ றென்னு மெழினகரி லேயுந் தக்வ ராயருக்கு
விறும்பூ தடையப் பேரருளை யினிதாங் களித்த தன்மைபோல்
வெறும்பாழ் மனத்தை யுடையேற்கு மேலோ யருளைப் புரிந்திடுவாய்
நறும்பூ விதழி தனைச்சூடு நம்பா கல்லற் பரம்பரனே. (99)

சீரா ருமையா டன்னோடுந் தேரா வுடையார் கோவிறனில்
பேரார் மாதே வனுக்கருமைப் பேற்றை யளித்த பெருமானே
காரார் கடலி னஞ்சினைவே கறுக்க மலத்தைக் கெடுத்தாள்வாய்
போரா யிரங்கொண் டெஞ்ஞான்றும் பிறங்குங் கல்லற் பரம்பொருளே 100

## வாழி.

கல்விமா நகரம் வாழி கயற்கண்ணி அம்மை வாழி
சொல்லருஞ் சுந்த ரேசர் துணைமலர்ப் பாதம் வாழி
அல்லல்தீர் அடியார் வாழி ஆருயிர் அனைத்தும் வாழி
பல்லல்சேர் இந்த நூலை மகிழ்வுடன் படிப்போர் வாழி.



ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் திருவடி வாழ்க.

சோமசுந்தரேசர் சதகம் முற்றிற்று.

சிவமயம்.

## திருக்களராண்டவரென்னும்

## ஸ்ரீ வீரசேகரஞானதேசிக சுவாமிகள்

# பஞ்சரத்நம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

கருக்கிளருந் துன்பக் கடனீக்க வந்து
திருக்களர்வா ழாண்டவன்மேற் றேர்ந்தே—யுருக்கமுடன்
பஞ்சரத்நம் பாடுதற்குப் பார்புகழு மைந்துகரக்
குஞ்சரமே செய்வாய் குணம்.

நூல்.

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்திகழ் மறையின் முடிவினை யடையுஞ் சீடர்கட் கருளித்தன் வடிவாம்
பேர்திகழ் பெரிய பொருளதாய்ப் புரியும் பீடமை யொருவனே தமியே
ஞார்திக மூலக மயறனை யகன்று நன்மையை யடைந்திடப் பிறவி
வேர்திகழ் கொடிய மடமையைக் கெடுப்பாய் வித்தகா வீரமா தவனே. (1)

பொன்னிலுந் துயரப் பிறப்பிட மான பூவையர் முதலுள பொருள்க
டன்னிலு மடியே னழுந்திடா துன்றன் றுண்மல ரருளிநீ புரப்பாய்
பொன்னிமா நதிபல் வளந்தனை யாக்கப்பொற்பமைசிறப்பினைப்பொருந்தும்
மன்னிய புகழ்சேர் திருக்களர் வாழும் மாண்பமை வீரமா தவனே. (2)

கண்ணின்மா மணியே கடவுள ருவக்குங் கற்பகத் தருவினை யனையாய்
மண்ணின்மேற்பிறந்தேமயறனிற்படிந்துமாண்டிடும் மடையனேன் றனக்கு
தண்ணின்மா வருள்பா லித்தெனை யரிய தன்மைசேர் கதியினில் வைப்பா
யண்ணன்மா புவனம் புகழ்திருக் களர்வா ழருமைசேர் வீரமா தவனே. (3)

கோதிலா வமுத மனையவெம் பெரும குவலயந் தன்னிலே யெனக்கு
மாதுயர் கொடுக்கும் பிறவியைக் கெடுக்கும் மாதவர் பிறரிலை யதனுன்
மாதொரு மருங்கா மிறைவனொ ருறையும் மாபுகழ்த் திருக்களர் விளக்கு
மாதியே யெனது வாரிய புரப்பா யரும்புகழ் வீரமா தவனே (4)

இந்துசே கரனுந் தந்திமா முகனு மெழிலமை கந்தரா தனுமிவ்
வந்தமா ருலகந் தந்தவண் முதலோ ரடைந்திட வீதியின் மகிழ்ந்தே
பந்தமா ருடலின் றெந்தமே யகற்றி பாகதி மேவிடே யருள்வா
யிந்தமா வுடலில் வந்திடாக் கதியை யெந்தையே வீரமா தவனே. (5)

பஞ்சரத்நம் முற்றிற்று